# செப்டம்பர் – 14 – வெள்ளி

**திருச்சிலுவையின் மகிமை**

**என் மக்களே! என் அறிவுரைக்குச் செவிசாயுங்கள்:**

**திபா. 78:1**

## முதல் வாசகம் : எண்ணாகமம் 21 : 4 – 9

அக்காலத்தில் ஏதோம் நாட்டைச் சுற்றிப்போகும்படி ஓர் என்ற மலையிலிருந்து அவர்கள் ”செங்கடல் சாலை” வழியாகப் பயணப்பட்டனர் அவ்வழியை முன்னிட்டு மக்கள் பொறுமை யிழந்தனர். மக்கள் கடவுளுக்கும் மோசேக்கும் எதிராகப் பேசினர் ”இந்தப் பாலைநிலத்தில் மாளும்படி எங்களை எகிப்திலிருந்து கொண்டு வந்தது ஏன்? இங்கு உணவுமில்லை, தண்ணீருமில்லை, அற்பமான இந்த உணவு எங்களுக்கு வெறுத்துப் போய்விட்டது” என்றனர். உடனே ஆண்டவர் கொள்ளிவாய்ப் பாம்புகளை மக்களிடையே அனுப்பினார் அவை கடிக்கவே இஸ்ரயேல் மக்களில் பலர் மாண்டனர். அப்போது மக்கள் மோசேயிடம் வந்து, ”நாங்கள் பாவம் செய்துள்ளோம்” நாங்கள் ஆண்டவருக்கும் உமக்கும் எதிராகப் பேசியுள்ளோம் அவர் இந்தப் பாம்புகளை அகற்றிவிடும்படி நீர் ஆண்டவரிடம் வேண்டிக் கொள்ளும்” என்றனர். அவ்வாறே மோசே மக்களுக்காக மன்றாடினார். அப்போது ஆண்டவர் மோசேயிடம், ”கொள்ளி வாய்ப் பாம்பொன்றைச் செய்து அதை ஒருகம்பத்தில் பொருத்து. கடிக்கப்பட்டோரில் இதைப்பார்க்கிற ஒவ்வொருவனும் பிழைப்பான்” என்றார். அவ்வாறே மோசே ஒரு வெண்கலப் பாம்பைச்செய்து அதை ஒருகம்பத்தில் பொருத்தினார் பாம்பு கடித்த எந்த ஒரு மனிதனும் இந்த வெண்கலப் பாம்பைப் பார்த்து உயிர் பிழைப்பான்.

**பதில்பாடல் :** இறைவனின் செயல்களை மறவாதிருங்கள்.

## இரண்டாம் வாசகம் : பிலிப்பியர் 2 : 6 -11

சகோதர சகோதரிகளே! கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர் தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக ”இயேசு கிறிஸ்து ஆண்டவர்” என எல்லா நாவுமே அறிக்கையிடும்.

## நற்செய்தி : யோவான் : 3 : 13 - 17

அக்காலத்தில் இயேசு நிக்கோதேமிடம் கூறியதாவது: விண்ணகத்திலிருந்து இறங்கி வந்துள்ள மானிட மகனைத் தவிர வேறு எவரும் விண்ணகத்திற்கு ஏறிச் சென்றதில்லை. பாலைநிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டதுபோல மானிடமகனும் உயர்த்தப்பட வேண்டும். அப்போது அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர். தம் ஒரேமகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்தமகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார். உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம்மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார்“ என்றார்.

**தியானம்:** இறைவனுக்க எதிராக செய்யப்படும் ஒவ்வொரு காரியங்களக்கும் தண்டனை நிச்சயம். ஆனால் இறைவன்மேல் நம்பிக்கை கொண்டு வாழும் ஒவ்வொருவருக்கும் நிற்சயம் விடுதலை உண்டு என்று இன்றைய தியான வாசகங்கள் கூறுகின்றன. அன்று இஸ்ராயேல் மக்கள் இறைவனுக்கு எதிராகப் பேசியதால் இறைவன் கொள்ளிவாய்ப் பாம்புகளை அனுப்பி அவர்களுக்கு தண்டனை கொடுத்திருந்தாலும், அவர்கள் உணர்ந்தவர்களாக தங்களைக் காப்பாற்றிக்கொள்ள இறைவனிடம் வேண்டும்படி மோசேயிடம் கூறினார்கள், அப்போது மோசேக்கு இறைவன் பொற்கம்பத்தில் சர்ப்பத்தை செய்து அதை உற்றுப் பார்ப்போர் எல்லோரும் உயிர் பிழைப்பார்கள் என்று கூறி அவர்களுக்கு விடுதலை கொடுக்கின்றார். மண்ணுலகில் நாங்கள் புரியும் பாவகாரியங்கள், தீச்செயல்கள், பாலியல் கொடுமைகள், இவ்வாறான செயல்களினால் நாங்கள் இறைவனை விட்டு பிரியாமல் இருக்கவே இறைவன் தனது மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார். இதை உணராது வாழ்ந்ததினால்தான் தானும் தந்தையின் நிமித்தம் பாடுபட்டு மரிப்பார் என்பதை அவர் வெளிப்படுத்தகிறார். (“அன்று பாலநிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டது போல மானிட மகனும் உயர்த்தப்பட வேண்டும்”) இன்று எங்கள் மத்தியிலும் இறைவனுக்க எதிராக பல சர்ச்சைகள், கருத்து முரன்பாடுகள் ஏற்படதான் செய்கின்றன. அவ்வாறான வழியில் வாழ்ந்தேமேயானால் எமக்கும் தண்டனை நிற்சயம் உண்டு. எனவே இதை உணர்ந்து இயேசு ஒருவரால்தான விடுதலை தர முடியும் என்பதை உணர்ந்தவர்களாக இறைவன்மேல் நம்பிக்கை கொண்டு வாழ்வோம்.